**பியகம பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பியகம பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்வதற்காக இது வரையும் அங்கீகாரம் கிடைக்கப்பெறாத ரூபா 5,000,000 தொகையொன்று கடன்கொடுத்தோர் மற்றும் மூலதன செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் போது அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் மேலதிகமாக கிடைத்த சம்பள மீளளிப்பு பணம் ரூபா 11,623,517 தொகை கணக்குகளில் முற்பெறுவனவாக காண்பிப்பதற்கு பதிலாக வருமான கடன்பட்டோரில் குறைக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் பெறவேண்டிய | சரியான பெறுமதியை கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | பட்டதாரி பயிலுனர் படிகள் மற்றும் உறுப்பினர் படிகள் முறையே ரூபா 128,086 மற்றும் ரூபா 1,680,000 தொகைகள் கடன்பட்டோராக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | முன்னைய ஆண்டுகளில் ரூபா 767,794 பெறுமதியான 02 கடன்பட்டோர் மீதிகள் கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்ததுடன், 04 கடன்பட்டோர் மீதிகளுக்குரிய சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படாமையினால் கடன்பட்டோர் ரூபா 361,609 தொகையினால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான கடன்பட்டோர் மீதியை கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது பொலித்தீன் விற்பனையினால் கிடைத்த வருமானம் ரூபா 104,525 மற்றும் முன்னைய ஆண்டுகளில் கிடைத்த வருமானம் ரூபா 31,904 தொகைகள் பொது வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சகல வருமானங்களும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஒரு பகுதி ஊழியர்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்காக பொது வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| (உ) | மீளாய்வாண்டின் போது முன்பள்ளி பாடசாலைகளில் இருந்து கிடைத்த வருமானம் ரூபா 512,000 மற்றும் செலவினம் ரூபா 1,149,125 என்பன கணக்குகளில் காண்பிக்கப்படாதிருந்ததுடன், முன்னைய ஆண்டுகளில் கிடைத்த வருமானங்களும் செலவினங்களும் கணக்கில் காண்பிப்பதற்கு பதிலாக பொது வைப்புக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 928,075 மீதியொன்று பொது வைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சகல வருமானங்களையும் செலவினங்களையும் கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சகல கொடுக்கல் வாங்கல்களும் பொது வைப்புக் கணக்கின் மூலம் சீராக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பெறுமதி குறிப்பிடப்படாத 02 டெக்டர்களும் டேலர் ஒன்றும் மற்றும் கல் உருளை என்பன நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 04 கணக்கு விடயங்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 43,882,074 ஆக இருந்த போதிலும், பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 57,331,873 ஆனமையால் ரூபா 13,449,799 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசுப் புத்தகத்தின் மீதி ரூபா 15,133,788 ஆக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் காசு மீதி ரூபா 12,617,319 ஆனமையால் ரூபா 2,516,469 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாட்டிற்கான காரணங்கள் அவதானிக்கப்பட்டு சரிசெய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் மதிப்பீட்டு சட்டத்தின் பிரிவு | 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதன வரி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2008 மற்றும் 2012 ஆம் | சட்டத்தின் பிரகாரம் புதிய மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | தற்போது புதிய மதிப்பீடு அமுல்படுத்தப்படுகின்றது . |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்கம் 20. | ஆண்டுகளின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | இரண்டு வருடங்களை விஞ்சிய ரூபா 8,919,417 பெறுமதியான வைப்பு மீதிகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் வருமானத்திற்கு எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் 01 வருடத்திற்கும் 02 வருடங்களுக்கும் இடையே ரூபா 13,499,317 தொகையான கடன்கொடுத்தோர் மீதி காணப்பட்டது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையில் செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படாத மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் 01 வருடத்திற்கும் 02 வருடங்களுக்கும் இடையே ரூபா 10,371,654 தொகையான கடன்பட்டோர் மீதி மற்றும் ஒரு வருடத்திற்கு குறைவான ரூபா 31,358,917 தொகையான கடன்பட்டோர் மீதி என்பன காணப்பட்டது. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கிடைக்கப்பெறாத மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 88,621,019 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 142,915,121 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 சனவரி மாதத்தில் விநியோகிக்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 03 காசோலைகளுக்குரிய ரூபா 64,732 தொகை நடப்பாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- | --- |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 78,550,145 | 81,187,305 | 79,485,440 | 29,816,601 | 77,752,222 | 81,010,773 | 89,250,070 | 29,039,953 |
| (ii) | வாடகை | 4,972,960 | 6,711,705 | 5,827,748 | 8,770,974 | 5,058,860 | 5,101,750 | 4,677,487 | 10,916,880 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,010,000 | 4,834,328 | 4,816,328 | 18,000 | 2,469,000 | 3,798,671 | 3,833,671 | 3,333,297 |
| (iv) | ஏனைய வருமானம் | - | - | 248,809,313 | 1,176,006 | 243,621,656 | | 273,382,966 | - |
| | | 86,533,105 | 92,733,338 | 338,938,829 | 39,781,581 | 328,901,738 | 89,911,194 | 371,144,194 | 43,290,130 |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதன வரி மீதி கணக்குகளின் பிரகாரம் ரூபா 46,352,623 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 6,705,591 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்டும், ரூபா 12,734,492 தொகை 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலும் இருந்தன. | நிலுவை ஆதன வரி மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆதன வரியை அறவிடுவதற்கு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

### 2.3.3 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடவத்தை உப அலுவலகத்திற்குரிய 06 கடைகளில் இருந்து ரூபா 5,324,542 தொகையான நிலுவை கடை வாடகை காணப்பட்டதுடன், முத்திரையிடப்பட்ட 05 கடைகளுக்குரிய ரூபா 593,450 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 06 கடைகளுக்குரியதாக வழக்கொன்று காணப்படுகின்றமையினால் அந்த 06 கடைகளின் நிலுவைப் பணத்தை அறவிட முடியாத பட்டிலாக காணப்பட்டது. முத்திரையிடப்பட்டுள்ள கடைகளுக்கு மீண்டும் கேள்வி கோரப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் 08 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | சபைக்கு உரித்தான உப விதிகளை விதித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய உப விதிகள் விதிக்கப்படும். |

### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பாதீட்டின் மூலம் ரூபா 29,745,305 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதும், 05 செயற்பாடுகள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | உரிய பணிகள் விரைவாக நிறைவேற்றப்பட்ட வேண்டும். | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்களுக்கு பதிலாக பொது மக்களின் கோரிக்கையின் பிரகாரம் புதிய செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**(இ) சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சுற்றாடல் பிரச்சினைகளுக்குரியதாக நடப்பாண்டின் போது 644 பொது மக்கள் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அதில் 323 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | பொது மக்களின் முறைப்பாடுகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்படும். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி இலக்கு தொடர்பான 2020 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அதிகார பிரதேசத்தின் மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதார நிலைமைகளை கட்டியெழுப்புவத்றகான நீண்டகால திட்டம் 2019 முதல் 2023 வரை தயாரிக்கப்பட்டிருந்ததுடன், ஒட்டுமொத்த செயல்முன்னேற்றம் 50 சதவீதம் ஆக இருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | செயல்முன்னேற்றம் 50 சதவீதமாக இருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இரண்டாம் நிலையில் 14 பதவிகள் மற்றும் மூன்றாம் நிலையில் 17 பதவிகள் என்பன வெற்றிடமாக காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நடப்பாண்டின் போது வாடகை வாகனத்திற்காக ரூபா 12,959,960 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததுடன், அதில் | வாடகை வாகனங்களை பயன்படுத்துவதை குறைப்பதற்கு | எதிர்காலத்தில் சேவை தேவையின் பிரகாரம் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| கழிவுப் பொருள் கொண்டு செல்வதற்கு ரூபா 5,017,900 தொகை மற்றும் வீதிப் பிரிவின் செயற்பாடுகளுக்காக ரூபா 4,135,100 தொகை செலுத்தப்பட்டிருந்தது. சபைக்குச் சொந்தமாக வாகனங்களை கொள்வனவு செய்யும் இயலுமை காணப்படும் போது நீண்ட காலம் முதல் வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெறப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எடுக்கப்படும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 கைையேற்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நடப்பாண்டில் ரூபா 1,329,019 செலவில் சியம்பலாப்பே தெற்கு புரான தேவாலயம் அருகில் சனசமூக மண்டபமொன்று அபிவிருத்தி செய்யப்பட்டடிருந்த போதும், அந்த நிலம் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மூலம் சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 4,716,000 பெறுமதியான சொத்துக்கள் 2020 மே 31 வரையிலும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 02 காணிகளில் வெளித்தரப்பினர் அனுமதியின்றி குடியிருந்து வருவதுடன், 49 காணிகளுக்குரிய வேலி எல்லை அமைக்கப்பட்டு பெயர் பதாதை பொருத்தப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணிகளுக்குரிய வேலி எல்லை அமைத்தல் மற்றும் பெயர் பதாதை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| (ஆ) பொதுக் கிணறுகளின் மெய்மெய்யாவின் பிரகாரம் 12 கிணறுகளை கண்டறிய முடியாதிருந்ததுடன், 02 கிணறுகள் அதிவேக வீதிக்காக கைப்பற்றப்பட்டிருந்தது. | சொத்துக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மெய்மெய்யாய்வு செய்யப்படுகின்றதுடன், இந்த கிணறுகள் தொடர்பான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 3.4.3 வருடாந்த பொருள் மெய்மெய்யாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மல்வானை, பியகம மற்றும் தெல்கொட பொது நூலகங்களில் ரூபா 63,080 பெறுமதியான 153 புத்தகங்கள் மெய்மெய்யாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மெய்மெய்யாவிற்கு சமர்ப்பிக்கப்படும். |